**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 87 of 2022**

**Prosecution Witness : PW5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : மெகபூப்ஜான் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(A1, A2 present)**

**Dated.11.03.2025**

**முதல் விசாரணை**

நான் திருமணமேட்டில் வசித்து வந்து பெட்டி கடை வைத்து வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது அல்ல. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**கு.வி (அரசு தரப்பில்)**

கடந்த 27.03.2022ம் தேதி மாலை சுமார் 3 மணியளவில் நானும், எனது நண்பர் ராஜகோபால் என்பவரும் திருமணமேடு ரயில்வே கேட் அருகே உள்ள காம்ப்ளக்ஸ் அருகில் நின்று கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. போலீசார் எங்களது முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள்

என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில், நானும், ராஜகோபால் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி விசயங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்) – இல்லை**

ஒப்பம்/–செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி

/உண்மை நகல்/

S.RAJKUMAR Digitally signed by S.RAJKUMAR

நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 87 of 2022**

**Prosecution Witness : PW6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : தினேஷ்குமார் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(A1, A2 present)**

**Dated.11.03.2025**

**முதல் விசாரணை**

நான் திருமணமேட்டில் வசித்து வந்து சிவில் இன்ஜினியராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 மற்றும் அ.சா.3 ஆகியோரை எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

குு.வி (அரசு தரப்பில்)

கடந்த 24.03.2022ம் தேதி மதியம் சுமார் 02.15 மணியளவில் 1ம் எதிரி அ.சா.3ன் டெய்லர் கடைக்கு முன் வந்து அ.சா.1யை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்றால் சரியல்ல. தகவல் தெரிந்து கடைக்கு வந்த அ.சா.1 1ம் எதிரியிடம் ஏன் இப்படி என் மகளை தரக்குறைவாக திட்டுன என்று கேட்டபோது, இருவருக்கும் இடையே

வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அப்போது 1ம் எதிரி அ.சா.1 யை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி, நான் திட்டுனா எதுக்குடி உங்க அப்பன் என்கிட்ட வந்து கேட்குறான் என்று சொல்லி அ.சா.3 ன் கையை பிடித்து முறுக்கி அடித்தார் என்றால் சரியல்ல. அ.சா.3 யை அடிப்பதை தடுக்க வந்த அ.சா.1 யை அங்கு வந்த 2ம் எதிரியானவர் கீழே கிடந்த ரீப்பர் கட்டையை எடுத்து கை, முதுகில் அடித்து கீழே தள்ளி கீழே கிடந்த சுண்ணாம்பு கல்லை எடுத்து அ.சா.1 ன் தலையில் அடித்தார் என்றால் சரியல்ல. எதிரிகள் இருவரும் ஒழுங்கா இருந்துக்கோ, இல்லனா காலி பன்னிவிடுவேன் என்று சொல்லி சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் அ.சா.3 தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக இலால்குடி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றுக் கொண்டார் என்றால் சரியல்ல. மேற்படி விசயங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்) – இல்லை**

ஒப்பம்/–செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி

/உண்மை நகல்/

S.RAJKUMAR Digitally signed by S.RAJKUMAR

நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி